**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**60 /2024

**Prosecution Witness** : 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வக்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. கிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | கொட்டார பட்டி | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 26 |
| | | | **Dated** | : | 14.08.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 3 திரு. செல்வக்குமார் ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தற்போது கோவை, நம்பி அழகன் பாளைத்தில் வசித்து சக்தி இன்பக்ஸ் என்ற கம்பெனியில் கணக்காளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்து போனவரை தெரியும். கடந்த 06.08.2023ம் தேதியில் காலை 10.30 மணி இருக்கும். நான் கொட்டார பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டு இருந்தேன். அப்போது சரவணன்

என்பவர் அவரது வீட்டிற்கு அருகில் சண்டை போடும் சத்தம் வந்தது. நான் போய் பார்த்தேன். அங்கு ஆஜர் எதிரி புகழ்நாதனை கீழே போட்டு தனது கையால் அவரது தலையிலும், நெஞ்சிலும் அடித்து கொண்டு இருந்தார். ஏண்டா தேவிடியா பயலே எனக்கு பிடிக்காத எனது எதிரியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வாயா என கேட்டு அடித்தார். நானும், அங்கிருந்த சரவணனும் அவர்களை விலக்கி விட்டு புகழ்நாதனை நான் வெளியே கொண்டு வந்தேன். அப்போது புகழ்நாதன் தனது தலையின் வலது பக்கத்தில் வலிக்கிறது என்றும், நெஞ்சு பட பட என்று அடித்து கொள்கிறது என்று கூறினார். அப்போது அவரது மனைவிக்கு தகவல் கொடுத்து இருந்தோம், வந்தவரிடம் விசயத்தை சொன்னோம். அவரது முகத்தில் தண்ணீர் தெளித்தும், எனது தம்பி காரை எடுத்து கொண்டு வந்து அவரை ஏற்றி ரெட்டியார் சத்திரத்தில் மேரிஸ் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு பல்ஸ் குறைவாக இருந்ததால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்க சொன்னார்கள். அங்கு அவரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்து விட்டதாக அவரை பரிசோதித்த மருத்துவர்கள் கூறினார்கள். புகழ்நாதனின் மனைவி எனது அக்கா ஆவார். இது சம்பந்தமாக அவர் கன்னிவாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக 09.08.2023 தேதியில் ஆத்தூர் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அது தான். அது **Ex.P**4. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

நான் கொட்டார பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டு இருந்தேன். அப்போது சரவணன் என்பவர் அவரது வீட்டிற்கு அருகில் சண்டை போடும் சத்தம் வந்தது. நான் போய் பார்த்தேன். அங்கு

ஆஜர் எதிரி புகழ்நாதனை கீழே போட்டு தனது கையால் அவரது தலையிலும், நெஞ்சிலும் அடித்து கொண்டு இருந்தார். அப்போது அவரது மனைவிக்கு தகவல் கொடுத்து இருந்தோம் என்று முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை போலீஸ் விசாரணையின் போது நான் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் போலீஸ் விசாரணை வாக்குமூலத்தில், சத்தம் கேட்டு நான் போன போது கீழே கிடந்த புகழ்நாதனை நான் தூக்கி எழுப்பி விட்டேன் என சொல்லப்பட்டு உள்ளது என்றால் சரிதான் (161 St. to be clarified, whether it is applicable and admissible evidence) நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் எந்த இடத்தில் சண்டை நடந்தது என நான் சொல்லவில்லை என்றும், அதே போல அசா.2 சரவணன், அசா.4 ஜெயராணி ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டில் இருந்து சரவணனின் வீடு தொலை தூரத்தில் இருக்கிறது என்றும், என் வீட்டில் இருந்து சத்தம் போட்டால் சரவணன் வீட்டிற்கு கேட்காது என்றும் சொன்னால் சரியல்ல. நீதித்துறை நடுவரிடம் வழக்கை வலுப்படுத்த உண்மைக்கு மாறாக வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பபவத்தை நேரில் பார்க்காமல் பின்னிட்டு தகவல் தெரிந்து ரெட்டியார் சத்திரம் மருத்துவமனைக்கு சென்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. அடித்துவிட்டு கீழே தள்ளுவதற்கும், கீழே தள்ளிவிட்டு அடிப்பதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.14 19:09:09 +0530